# என் யேசு என்னைக் கேட்கின்றார்

என் யேசு என்னைக் கேட்கின்றார் - நீ
என்ன தருவாயோ என்று
என் கரங்களை ஏந்திச் செல்வேன் - என்
வாழ்வினை அவரில் தந்தேன்

**1**
பொன் பொருளும் எனக்கு இல்லை- உன்
அருள் பாதம் பணிந்து வணங்க – ( 2 )
என் ஆன்ம கதவைத் திறந்தேன் - என்
வாழ்வை முழுதும் தந்தேன்
நிலையாக என்னைத் தந்தேன்

**2**
மணம் கமழும் மலர்களானேன் - உன்
திருக் கோவில் தீபம் ஆனேன் - 2
அன்பென்னும் பாதை அறிந்தேன்
அருள் வாழ்வில் மகிழ்வை உணர்ந்தேன்
திருவாழ்வில் இன்றும் மகிழ்வேன்